17 .03.2021

Case No.OS.252/2013

PW.1– சுஜாதா – **பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு நான் குடியிருக்கும் வீடு அல்ல. என்னிடம் காட்டப்படும் மற்றொரு புகைப்படத்தில் உள்ளது என் வீட்டிற்கு செல்லும் தெரு என்றும் அதிலுள்ள வீட்டின் அமைப்பு என்வீடு உடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலம் வீட்டை பார்வையிட்டு அதில் நான் குடியிருக்கிறேனா என்று அறிக்கை செய்ய எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. என் பாட்டி இன்னும் உயிருடன் தான் இருக்கிறார் என்றால் சரிதான். சொத்து எனது தகப்பனார் பெயரில் உள்ளதால் என் பாட்டியை தரப்பினராக வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு போடும்போது அதற்கான சங்கதிகளை அப்போது எனது அப்பா உயிருடன் இருந்ததால் அவர் சொல்லியிருக்கலாம். அதன் பிறகு எனது அண்ணன் சொல்லியிருக்கலாம். என் தக்ப்பனார் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் இல்லை என் சித்தப்பா வழக்கு போட்டார். பிராமின் தெருவில் உள்ள சொத்து தன்னுடையது என்று வழக்கு தாக்கல் செய்தார். என் குடும்பத்திற்கு பிராமின் தெருவிலும், பெருமால் கோயில் தெருவிலும் 2 வீடுகள் என்று சொன்னால் சித்தப்பா திருமணமாகி நாங்கள் பிறப்பதற்கு முன்பாகவே தனியாக சென்றுவிட்டார். அவர் தனியாக போவதற்கு முன்பாக அதற்கு முன்பாக 2 வீடுகள் இருந்தது என்று சொன்னால் நான் பிறப்பதற்கு முன்பாகவே என் சித்தப்பா தனியாக போய்விட்டார். வழக்கு போட்டுள்ள சொத்து என் அப்பா வாங்கியது. அதற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சக்குபந்தி மற்றும் விஸ்தீரனம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் யாரிடம் சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு மெத்தை வீடா, ஓட்டுவீடா என்றால் தாவா சொத்து ஓட்டு வீடாக இருந்தது. பாழடைந்துவிட்டதால் அது இடிந்து தற்போது காலிஇடமாக உள்ளது. நான் வள்ளலார் நகரில் மாமியார் வீட்டில் வசித்து வருகிறேன். என் கணவருக்கு 3 வருடத்திற்கு முன்பாக விபத்து ஏற்பட்டு சுயநினைவில்லாமல் இருந்து வருகிறார் என்றால் இல்லை இப்போது நல்ல நிலைமையில்தான் இருக்கிறார். நான் 2 வருடங்கள் கணவரை பிரிந்து விளாப்பக்கத்தில் எனது அம்மாவுடன் இருக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வப்போது வந்துபோவேன். விளாப்பக்கத்தில் என் அம்மா

எங்கு குடியிருக்கிறார் என்றால் என் அப்பா வீட்டில் குடியிருக்கிறார். அது என் அப்பாவின் கிரையம் வாங்கிய சொத்து என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த வீடு பெருமால் கோயில் தெருவில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு பெருமாள் கோயில் தெருவில் உள்ள வீடு என்று சொன்னால் சரிதான். சாட்சி பின்னிட்டு இல்லை என்று மருக்கிறார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது பெருமாள் கோயில் என்று சொன்னால் சரிதான். மேற்படி புகைப்படம் குறியீடு செய்ய வாதி தரப்பு வழக்கறிஞரால் புகைப்படத்தின் சிடி, நெகடிவ் உடன் தாக்கல் செய்யவில்லை என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனை வழக்கின் இறுதியில் தீர்மாணிக்கப்படும் என கருதி மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. தாவா சொத்தின் பட்டா தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் என் அப்பா கொடுத்திருக்கலாம். இந்த வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதிக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்றும் எனது அப்பாவிற்கு நாங்கள் தற்போது குடியிருக்கும் வீடு ஒதுக்கப்பட்டது என்றும் சொத்தினை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏற்பட்டபோது சொத்து அசல் ஆவணம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பிரதிவாதி பட்டாவை மாற்றிக்கொண்டுள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பாகவே நடந்துவிட்டது. தாவா சொத்தை எந்த காலத்திலும் நாங்கள் அனுபவித்தது இல்லை என்றும் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளதால் அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எனது பாட்டியை தரப்பினராக வழக்கில் சேர்க்காததாலும் , நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்பதால் தடை உத்தரவு பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினையின் பேரில் பிரதிவாதி தனக்கு வந்த சொத்தினை தனது மகனின் பேரில் செட்டில்மெனட் எழுதியுள்ளார் என்றும் தாவா பரிகாரம் நான் கேட்கஇயலாது என்று சொன்னால் சரியல்ல. கூட்டுகுடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் என் அப்பா பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றும் தவறான முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட

சொத்தினை தனித்தனியே அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.